# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 85 — 1973 නොවැම්බර් 09 වැනි සිකුරාදා — 1973.11.09

85 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. .. | 441 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 444 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 447 |
| துணை விதிகள் .. .. .. | 447 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுகள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 449 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 8ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் குருநாகல் மாவட்டத்திலுள்ள பிங்கிரியக் கிராமப் பிரதேசத்தில் தற்போதமைந்துள்ள வட்டாரங்களை உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1972 செத்தெம்பர் 29ன் 27ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை அதன்கண்ணுள்ள 2 (அ), 2 (ஆ) ஆகிய பந்திகளில் "1973" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக "1974" என்னும் இலக்கங்களை இதுவதன்மூலம் இவ்வறிவித்தல் வாயிலாகத் திருத்துகிறேன்.

நீல த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 18 ந் உ.

11-260/1—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85.

---

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 8ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம்,உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள ரஸ்ஸலக் கிராமப்பிரதேசத்தில் தற்போதமைந்துள்ள வட்டாரங்களைப் புதிய வட்டாரங்களாக உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1972 செத்தெம்பர் 29ன் 27ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை அதன்கண்ணுள்ள 2 (அ), 2 (ஆ) ஆகிய பந்திகளில் "1973" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக "1974" என்னும் இலக்கங்களை இதுவதன் மூலம் இவ்வறிவித்தல் வாயிலாகத் திருத்துகிறேன்.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 18 ந் உ.

11-260/2—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85.

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு.
1972 ம் ஆண்டு மே மீ 05 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

**கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் கொழும்பு மாவட்டத்திலுள்ள உடகஹப் பற்றுக் கிராமப்பிரதேசத்தில் தற்போதமைந்துள்ள வட்டாரங்களை உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1973 செத்தெம்பர் 29 ன் 27 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை அதன்கண்ணுள்ள 2 (அ), 2(ஆ) ஆகிய பந்திகளில் "1973" என்னும் இலக்கங்களுக்குப் பதிலாக "1974" என்னும் இலக்கங்களை இடுவதன்மூலம் இவ்வறிவித்தல் வாயிலாகத் திருத்துகிறேன்.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 18 ந் உ.

11-260/3—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வில்லியம் நீல் த அல்விஸ் ஆகிய நான் இவ்வறிவித்தல் வாயிலாக மாத்தறை மாவட்டத்திலுள்ள வெல்லபொட பற்றுப் பெரும்பாக அரசிறை உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அபரெக்கபம்பரெண்ட கிராமப் பிரதேசத்திலமைந்துள்ள தற்போதுள்ள வட்டாரங்களைப் புதிய வட்டாரங்களாக உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1972 ஒற்றோபர் 9 ந் தேதிய 28/4 ம் இலக்க அதிவிசேட கசற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை வருமாறு திருத்துகிறேன் :—

(1) அதன்கண்ணுள்ள 2 (அ), (ஆ) ஆகிய பந்திகளில் "1973" என்னும் இலக்கங்களுக்குப்பதிலாக "1974" என்னும் இலக்கங்களை இடுவதன்மூலம், அத்துடன் ;

(2) அதற்கான அட்டவணையின் II ம் நிரலில்—

(அ) 13 ம் வட்டாரத்தின் விவரணத்திற்குப் பதிலாகப் பின்வரும் விவரணத்தை இடுவதன் மூலம் :—
13 ம் வட்டாரம்—பம்பரெண்ட வடக்கு—பம்பரெண்ட வடக்கு, குரும்புறே ஆகிய கிராமங்களைக் கொண்டது.

(ஆ) 14 ம் வட்டாரத்தின் விவரணத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விவரணத்தை இடுவதன் மூலம் :—
14 ம் வட்டாரம்—அக்குறுபேபிலக் கிராமத்தைக் கொண்டது.

(இ) 15 ம் வட்டாரத்தின் விவரணத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விவரணத்தை இடுவதன் மூலம் :—
15 ம் வட்டாரம்—பம்பரெண்டமத்தி-அக்குறுபேபில என அழைக்கப்படும் பிரதேசத்தைத் தவிர்ந்த பம்பரெண்ட மத்திக் கிராமத்தைக் கொண்டது.

(ஈ) 17 ம் வட்டாரத்தின் விவரணத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விவரணத்தை இடுவதன் மூலம் :—
17 ம் வட்டாரம்—மடவில-மடவில எனுங் கிராமத்தைக்கொண்டது.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒற்றோபர் மீ 20 ந் உ.

11-502—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**நகரசபைகள் கட்டளைச்சட்டம்**

1967 ன் 2 ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 10 (2) என்னும் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் இடப்பட்ட கட்டளை.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் ஆண்டு 20 ந் உ.

கட்டளை

இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நகரசபைகள் ஒவ்வொன்றிலும் இப்போது பதவியிலிருக்கும் உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவுறும் திகதியாக 1973 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தின் 31 ம் திகதிக்குப் பதிலாக 1974 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தின் 31 ந் திகதி இத்தால் நியமிக்கப்படுகிறது.

**அட்டவணை**

ஹொறணை நகரசபை
கொலொன்னாவை நகர சபை
வெலிகமை நகரசபை
கடுகன்னாவை நகரசபை
அப்புத்தளை நகரசபை.

11-267/1—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்**

1967 ன் 2 ம் இலக்கச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச்சட்டத்தின் 10 (2) என்னும் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு பதில் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் இடப்பட்ட கட்டளை.

நீல் த அல்விஸ்,
பதில் அரசாங்க நிர்வாகம்,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 20 ந் உ.

கட்டளை

இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டினசபைகள் ஒவ்வொன்றிலும் இப்போது பதவியிருக்கும் உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவுறும் திகதியாக 1973 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தின் 31 ந் திகதிக்குப்பதிலாக 1974 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தின் 31 ந் திகதி இத்தால் நியமிக்கப்படுகிறது.

**அட்டவணை**

ஹோமகமைப் பட்டினசபை
கெசெல்வத்தைப் பட்டினசபை
பூண்டுலோயாப் பட்டினசபை
வத்துகெதறப் பட்டினசபை
அக்குரஸ்ஸப் பட்டினசபை
ஹிங்குராக்கொடைப் பட்டினசபை

11-267/2—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**உள்ளூராட்சி (நிர்வாகப் பிராந்தியங்கள்)**

கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 265)

பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :—

இலங்கை நிர்வாக சேவையின் II ஆம் வகுப்பைச் சேர்ந்தவரும் கண்டிப்பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான திரு. எம். பீ. சமரகோன் அவர்கள் இலங்கை நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த செல்வி கே.ஜி.டீ. விமலசிறி அவர்கள் மீண்டு கடமைக்குத் திரும்பும்வரை தமக்குரிய கடமைகளுடன் மாத்தளைப் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரினது பதவியில் 1973 செத்தெம்பர் 17ந் திகதியிலிருந்து பதிற்கடமையாற்றுவதற்கு.

டீ. இராஜேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 12 ந் உ.

11-501—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

**கிராமாட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டம்**

13 ம் பிரிவின் கீழான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்கக் கிராமாட்சி மன்றங்கள் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட கிராமாட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, திருகோணமலை உள்ளூராட்சித் துணை ஆணையாளர், பேட்றம் ஆர்னல்ட் ஜெயராஜா காசிநாதர் ஆகிய நான், திருகோணமலை மாவட்டத்துச் சாம்பல்தீவுக் கிராமாட்சி மன்றத்தின் 1 ம் வட்டார உறுப்பினர், திரு. சோதிலிங்கம் இராசேந்திரம், அவருடைய தெரிவின் பின்னர், சபைக்கு அறிவிக்காமல், சபையின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதைத் திருப்திகரமாயறிந்து, திருகோணமலை மாவட்டத்து சாம்பல்தீவுக் கிராமாட்சி மன்றத்தின் 1 ம் வட்டார உறுப்பினர், திரு. சோதிலிங்கம் இராசேந்திரம், இவ்வறிவித்தல் இலங்கைக் குடியரசுச் செய்திமடலில் வெளியிடப்படும் திகதியிலிருந்து தனது பதவியிலிருந்து நீங்கியுள்ளார் என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

பே. ஆ. ஜே. காசிநாதர்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

உள்ளூராட்சிப் பணிமனை,
நகர மண்டபம்,
திருகோணமலை,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 22 ந் வ.

11-299—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

எல்.டி.—பி. 22/53

**மின்சக்திச் சட்டம்**

1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்தி பற்றிய சட்டத்தின் 46 ம் பிரிவின் கீழும், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சரைக் கலந்தாலோசித்த பின்னர் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல் அமைச்சர் அளித்த அங்கீகாரத்துடனும் களனி பட்டினசபை ஆல் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு 7,
29.10.1973.

ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகளில்—

"சட்டம் எனில் 1957 ம் ஆண்டின் 59 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்ட படியான (205 ம் அத்தியாயமாம்) மின்சக்திச் சட்டம் எனப் பொருள்படும். "உத்தரவுப்பத்திரம்" எனில் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் களனி பட்டினசபைக்கு வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம் எனப்பொருள்படும்.

"உத்தரவுப்பத்திரக்காரர்" எனில் களனி பட்டிணசபை எனப் பொருள்படும்.

2. உத்தரவுப்பத்திரகாரரிடமிருந்து மின்சக்தி பெறவிரும்பும் எவரும்—

(1) விநியோகம் தேவைப்படுவதற்குக் குறைந்தது பதினன்கு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வழங்கும் படிவத்தில் உத்தரவுப்பத்திரகாரருக்கு விண்ணப்பஞ் செய்ய வேண்டும்; மேலும்

(2) வழங்கு கம்பிகளுக்கான செலவுகளை உத்தரவுப்பத்திரக்காரருக்கு முற்பணமாகச் செலுத்த வேண்டும், அல்லது உத்தரவுப்பத்திரகாரர் அவ்விதங் கேட்டால், சட்டத்தின் 33 ம் பிரிவின் கீழ் உத்தரவுப்பத்திரகாரருடன் எழுத்திலான ஒரு ஒப்பந்தமும் செய்தல் வேண்டும்.

(3) (அ) உத்தரவுப்பத்திரகாரரின் மின்சக்தி வழங்கு மூலக்கம்பிகளுடன் இணைக்கக்கருதியுள்ள நிறுப்பு எதனதும் கம்பியிடும் வேலையை மின்னேந்திரவியற் பொறியியலாளர் கழகத்தினுல் விதிக்கப்பட்ட கம்பியிடுதல் பற்றிய ஒழுங்குவிதிகளுக்கமைய அவ்வேலையைச் செய்து முடிக்கக்கூடிய திறமையுள்ள ஒரு தொழிற்ருபனத்திடம் அல்லது தனியார் ஒருவரிடம் பாவனையாளர் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வேலையை உத்தரவுப்பத்திரக்காரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் பரிசோதித்து, பரீட்சித்துப்பார்த்த பின்னரும், அவ்வேலை முன்னே சொல்லப்பட்ட கம்பியிடுதல்பற்றிய ஒழுங்கு விதிகளுக்கமைவாகச் செய்யப்பட்டுள்ளதென உத்தரவுப்பத்திரகாரர் திருப்தியுடைந்த பின்னரும் மாத்திரமே அந்நிறுப்புக்கு மின்சக்தி விநியோகம் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அந்நிறுப்பு சொல்லப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைவாக இல்லாவிட்டால் அந்நிறுப்பு அவ்வொழுங்கு விதிகளுக்கமைய அமைக்கப்படும்வரையில் அம்மனையகத்துக்கு மின்சக்தி விநியோகம் செய்யப்படமாட்டாது.

4. மின்சக்தி உபயோகிக்கும் ஒவ்வொருவரும் அம்மின்சக்திக்காக உத்தரவுப்பத்திரத்தில் விவரிக்கப்பட்ட விகிதத்தில் பணம் செலுத்த வேண்டும்.

5. (அ) பாவனையாளரின் மனையகத்தில் இருக்கும் சேவை வடக்கம்பிகளின் பாகமும் அம்மின்மாற்றியும், பிரதான பியூஸ்களும், மானியும் தாங்கு பலகையும் உத்தரவுப்பத்திரகாரரின் சொத்துக்களாகவே இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் உத்தரவுப்பத்திரக்காரரினுல் அதிகாரமளிக்கப்பட்ட அவரது ஊழியரல்லாத எவரும் அவற்றை அகற்றவோ அல்லது தலையிடவோ கூடாது.

(ஆ) பாவனையாளரின் புறத்தில் இருக்கும் உத்தரவுப்பத்திரக்காரரின் பிரதான பியூஸ், மானி ஆகியவற்றின் கம்பிகள், வடக்கம்பிகளையும் வேறு உபகரணங்களையும் பராமரிப்பது பாவனையாளரின் பொறுப்பாகும்.

(இ) சட்டத்தின் 47 (3) ம் பிரிவின்படி துணிக்கப்பட்ட நிறுப்பு எதும் மீண்டும் இணைக்கப்பட்டால், அந்நிறுப்பை பரிசோதித்து மீண்டும் இணைப்பதற்குரிய சலார், உத்தரவுப்பத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அறவிடப்படும். அதனைப் பாவனையாளர் முற்பணமாகச் செலுத்திவிடவேண்டும்.

(ஈ) எப்பாவனையாளரதும் கம்பிகளின் அல்லது பொருத்துகளின் சில பாகங்களின் ஒழுக்கு இருக்கும் பட்சத்தில், தமது மனையகத்தின் மானிகாட்டும் சக்திச் செலவு யாவற்றுக்கும் மின்சக்திச் சட்டத்தின் 41 ம் பிரிவிற்கிணங்க அவர் பணஞ் செலுத்தப் பாத்திரராவார்.

6. (அ) தமது மனையகத்துக்கு மின்சக்தி வழங்கப்பட்ட பின்னர் ஏற்கனவே உபயோகித்துவந்ததைவிடப் பெரிய அளவான எந்த விளக்கையும் விசிறியையும் அல்லது மோத்தரையையும் உபயோகித்த அல்லது மேலதிகமாக விளக்கெதையும் அல்லது மின்சக்தியைச் செலவிடும் உபகரணம் எதையும் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தவோ அல்லது தமது மனையகத்தில் பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை மாற்றவோ அல்லது விஸ்தரிக்கவோ விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவரும் அப்படியான வேலை ஆரம்பிப்பதற்கு குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னராவது உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

(ஆ) முன்பிருந்ததைவிடப் பெரிய விஸ்தரிப்பு, விளக்கு விசிறி அல்லது மோத்தர் எதனையும் அல்லது மேலதிக விளக்கு அல்லது சக்தியைச் செலவிடும் வேறு உபகரணம் எதையும் அவ்வித விஸ்தரிப்பு, விளக்கு, விசிறி, மோத்தர், மேலதிக விளக்கு அல்லது வேறு உபகரணத்தை உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் பார்வையிட்டுச் சோதித்துத் திருப்திப்படாதவரையில் எப்பாவனையாளரும், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவேனும் பிரதான் நிறுப்புடன் இணைக்கவோ இணைக்கச் செய்யவோ அல்லது நிறுவவோ கூடாது.

7 (அ) எவ்வீட்டிலும் உத்தரவுப்பத்திரக்காரரின் பியூஸ் உருகிப் போகும் பட்சத்தில் பாவனையாளர் உடனடியாக உத்தரவுப்பத்திரக்காரருடைய விசைநிலைய அல்லது சகவிசை நிலைய, அவ்வதற்கேற்றவாறு பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) உத்தரவுப்பத்திரக்காரரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரையும் தவிர்ந்த வேறெவரும் உத்தரவுப்பத்திரக்காரரின் சொத்தான உருகிப்போன பியூஸை மாற்றக் கூடாது.

(இ) பாவனையாளருக்கு அல்லது உத்தரவுப்பத்திரக்காரருக்குச் சொந்தமான பியூஸ் எதனையும் மாற்றுவதற்காக உத்தரவுப்பத்திரக்காரருடைய உத்தியோகத்தர் அல்லது வேலையாள் எவரதும் உதவி அவசியப்பட்டால், உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறுன கட்டணம் ஒன்று பாவனையாளரின் அந்த மாதக் கணக்கில் சேர்க்கப்படும்.

8. வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் முழு அல்லது பகுதிச் சக்தி விநியோகத் தடைப்பாட்டினுல் உண்டாகும் நஷ்டம் அல்லது சேதம் எதற்கும் உத்தரவுப்பத்திரக்காரர் பாவனையாளருக்குப் பொறுப்பாளியாகமாட்டார்.

9. சட்டத்தின் 45 ம் பிரிவின்படிக்குத் துணிக்கப்பட்டிருந்தபின் ஒரு நிறுப்பு மீண்டும் இணைக்கப்படுமாயின், சோதித்து மீளவும் இணைப்பதற்காக உத்தரவுப்பத்திரத்தில் சொல்லப்பட்டவாறுன ஒரு கட்டணத்தைப் பாவனையாளர் முற்பணமாகக் கொடுத்துவிட வேண்டும்.

10. (அ) கணக்குக் கொடுக்கப்பட்ட திகதியன்றே சகல கட்டணங்களும் கொடுபட வேண்டியனவாகக் கருதப்படும்.

(ஆ) ஒரு கணக்கில் பிழையிருப்பதாகச் செய்யப்படும் முறைப்பாடு எதுவும் பாவனையாளருக்குக் கணக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கிழமைக்குள் செய்யப்படாவிட்டால் உத்தரவுப்பத்திரக்காரர் அதனை ஏற்கமாட்டார்.

11. (அ) தனது வீட்டுக்கு மின்சக்தி விநியோகம் தேவைப்படாத பாவனையாளர் ஒவ்வொருவரும் உத்தரவுப்பத்திரக்காரருக்கு எழுத்தில் மூன்று முழு நாளைய அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

(ஆ) (அ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படாத விடத்துத் தனது வீட்டிலுள்ள உத்தரவுப்பத்திரக்காரரின் உபகரணங்களுக்குப் பாவனையாளர் பொறுப்பாளியாக இருப்பதுடன், பாவனையாளருக்கு அவ்விநியோகம் தேவையில்லையென உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கிடைத்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்குள் அவ்வீட்டில் செலவாகிய சக்தி முழுவதற்கும் பணஞ் செலுத்துதற்குப் பொறுப்பாளியாக இருப்பார். எனினும், சொல்லப்பட்ட மூன்று நாட்கள் கடக்கு முன்னர் உத்தரவுப்பத்திரக்காரரால் விநியோகம் துணிக்கப்பட்டால் துணிக்கப்பட்ட நேரம் வரைக்கும் அவ்வீட்டில் செலவான மின்சக்திக்கு மாத்திரமே பாவனையாளர் பணம் செலுத்தப் பாத்திரராவார்.

12. இருந்து வரும் இணைப்புகளுக்குச் சேர்த்தல், மாற்றுதல், செம்மைப்படுத்தல் உட்பட்ட மின்சார இணைப்பு வேலை எதனையும் தொடங்குதற்கு இரண்டு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் ஒன்றை உத்தரவுப்பத்திரக்காரருக்குக் கொடுத்து உத்தரவுப்பத்திரக்காரரின் ஒரு உத்தியோகத்தர் உத்தேச வேலையைப் பரிசோதிக்க வாய்ப்பளிக்காது தொடங்கக் கூடாது.

13. உத்தரவுப்பத்திரக்காரருக்கு அறிவித்தல் கொடுத்து அவரது முன்னங்கீகாரத்தைப் பெறாது எம்மனையகத்திலும் புதிய இணைப்பு எதற்கும் மின்சார வேலை செய்யப்படின் உத்தரவுப்பத்திரக்காரருக்கு முறைப்படியான அறிவித்தல் கிடைத்து அவசியமான பரிசோதனைகள் செய்யப்படுகின்றவரை, அத்தகைய வேலை செய்யப்பட்டுள்ள மனையகத்திற்கு மின்சக்தி வழங்குதற்கு உத்தரவுப்பத்திரக்காரர் மறுக்கலாம்.

14. உத்தரவுப்பத்திரக்காரரின் மின்சார விநியோக மூலக்கம்பிகளோடு ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள நிறுப்பு எதற்கும், உத்தரவுப்பத்திரக்காரருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அனுமதி பெறாமல் விஸ்தரிப்பு ஏதும் செய்யும் பட்சத்தில் அந்நிறுப்பு முற்றாக உத்தரவுப்பத்திரக்காரருடைய மின்சார விநியோக மூலக்கம்பிகளிலிருந்து துண்டிக்கப்படப் பாத்திரமானதாகும்.

15. எந்த நிறுப்பையும் மீண்டும் இணைப்பதற்காக விண்ணப்பம் ஒவ்வொன்றும் உத்தரவுப்பத்திரக்காரர் அதற்கென வைத்துள்ள படிவத்தில் செய்யப்பட்டு மின்சக்தி தேவைப்படுவதற்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துள் உத்தரவுப்பத்திரக்காரரின் காரியாலயத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

11–426—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை" யின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

**படிகள்.**—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. **சேவை நிபந்தனைகள்.**—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சடடத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் ஏதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. **நியமன விதிகள்.**—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்தவேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவீதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின் படி வடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைபபாற்றுச்சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும், அச்சேவையில், வேறொரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறுயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சி மன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்படாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. **உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகததர்கள் அரசாங்கததின மொழிச் கொள்கையை விளைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

(5) **கல்வியும் ஏனைய தகைமைகளும்.**—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழி

யில் கல்வியின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு.—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைதலிலிருந்து விலக்குப்பெறுவர்.

குறிப்பு.—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக்கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்

குறிப்பு.—(3) 4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. **போர்ப்படையிற் சேவை செய்த முன்னுள் வீரர்களுக்கான சலுகை.**—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்படட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னுள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்த, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. **வயதுச்சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும்பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. **வேண்டற்பால ஏனையவை.**—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எல்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும் ; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகவிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகி விட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப்பத்திரம்

### உள்ளூராட்சிச் சேவை

**முக்கியமாகக் கவனிக்க.**—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலிற் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றனர். விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறுது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணபபக்காரர் கீழ்க்காணும் கட்டணங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைகக வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணபகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

........ ..........(..........) **பதவிக்கான விண்ணப்பம்**

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.
   (ஆ) .................... பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
   தேசியஇனம் :————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக)

3. தபால் விலாசம் :————.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :—
   ————வருடங்கள்————மாதங்கள்————நாட்கள்
   (ஆ) பிறந்த திகதி :— வருடம் :————.
   மாதம் :————. திகதி :————.

5. பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பகாரர் :————.
   (ஆ) அவரது பிதா :————.
   (இ) அவரது பிதாவழிப் பேரன் :————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.
   (விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவவாதராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்.)

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :—

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 .............. | ...... | ...... | 1 .............. | ...... | ...... |
| 2 .............. | ...... | ...... | 2 .............. | ...... | ...... |
| 3 .............. | ...... | ...... | 3 .............. | ...... | ...... |
| 4 .............. | ...... | ...... | 4 .............. | ...... | ...... |
| 5 .............. | ...... | ...... | 5 .............. | ...... | ...... |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப.(சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல் தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1. சிங்களம் :————.
2. தமிழ் :————.
3. ஆங்கிலம் :————.

9. பெற்றுள்ள எதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழி நுட்ப/தொழில் அனுபவங்கள் :—

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர்வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றைவிட்ட திகதிகளுடன் தருக):—

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா ? :—

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக :————.

14. ஒரு நீதிமன்றத்தில் எதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? :————

16. வேறு எதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

**உள்ளூர் ஆட்சிச் சேவை**

தரம் I, நூல்நிலையப் பொறுப்பாளர் பதவிகள்

யாழ்ப்பாணம் மா. ந. சபை

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபையாற் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இடமாற்றத்திற்குரியவராவர். அத்துடன் உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்கும்படி வேண்டப் படுவர்.

3. **வேதனம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதன அளவுத் திட்டம் வருமாறு :—வருடாந்தம் 6,600—8 × 180—5 × 240—ரூ. 9,240. வருடாந்தம் ரூ. 7,320 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் வீதங்களுக்கும் நிபந்தனைகளுக்கு மிணங்க ஒரு திருமணப்படியும் வழங்கப்படும். (நூல்நிலையப் பயிற்சியில் ஒரு நன்கு மதிக்கப்பட்ட தகுதித் தேர்வுப் பத்திரம் (டிப்ளோமா) உடைய ஒரு உத்தியோகத்தர், வருடாந்தம் ரூ. 360 பிரகாரம் நாலு வேதனப் பெருக்கங்களைப் பெற்று வருடாந்தம் ரூ. 10,680 பெறும் உச்சத்தை அடைவார்.)

4. **வேண்டிய தகைமைகள்.**—(அ) வயது.—15.12.1973 இல் 40 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (உ. ஆ. சேவையிலுள்ள உறுப்பினர்களுக்கு இது பொருந்தமாட்டாது).

**(ஆ) கல்வித் தகைமை.**—விண்ணப்பதாரர்கள் தமிழ் ஒரு பாடமாக, ஒரு நன்கு மதிக்கப்பட்ட சர்வகலாசாலையின் பட்டதாரியாக இருப்பதுடன், நூல்நிலைய நிர்வாகத்திலும் அனுபவமுடையவர்களாக இருத்தல் வேண்டும். நூல்நிலைய வேலையில் ஒரு பயிற்சியும் அனுபவமும் இருத்தல் ஒரு மேலதிகத் தகைமையாகும்.

5. இவ்வர்த்தமானியின் IV ம் பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு, 15.12.1973 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவத்தில் 13 வது பந்திக்குப் பதிலாக பின்வருபவை இடப்பட வேண்டும். “ 13. (அ) நிர்வாக அனுபவம் பற்றிய விவரங்கள் (சேவை செய்த சரியான கால எல்லைகளுக்கான முழு விவரங்களும் இடங்களின் விவரங்களும் கொடுக்கப்பட வேண்டும்). (ஆ) நூல்நிலைய வேலையில் பெற்ற பயிற்சி அல்லது அனுபவம் பற்றிய விபரங்கள் எதும் இருந்தால். ”

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபைச் செயலாளருக்கு முகவரி இடப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக்கூடாது.

8. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ௵ ஒக்டோபர் ௴ 29 ந் ௳.

11-281—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**உள்ளூராட்சிச் சேவை**

தரம் I, II, III வேலைகள்/நீர்வேலைகள் அத்தியட்சர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

தரம் II வேலைகள் அத்தியட்சர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையைக் கீழ்க்காணும் உத்தியோகத்தர் முடித்துள்ளாரென இத்தால் அறியத்தரப்படுகிறது.

ஆர். சி. அபேசேகர — மாநகரசபை, கண்டி.

எட்கார் பர்ணந்து,
செயலாளர்,
உள்ளூராட்சிச்சேவை அதிகாரசபை.

11-498—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

## துணைவிதிகள்

**கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்**

1961 ன் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள யட்டிநுவரை மெதப்பலாத்தைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்ட துணைவிதி.

டி. இராஜேந்திரா,
மேலதிகச்செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ௵ ஒக்டோபர் ௴ 27 ந் ௳.

துணைவிதி

**தோட்டிவேலை**

தோட்டிவேலை சம்பந்தமாக சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத் துணைவிதிகளின் 6 ஆம் பாகத்தின் 11 ஆவது துணைவிதியின் நோக்கத்துக்கு சபைக்கு மாதாந்தம் செலுத்தப்படற்பாலதான தோட்டி வேலைக்கட்டணம் ஒவ்வொரு மனைத்தலம் சம்பந்தமாகவும் ரூபா 1/- ஆகவிருத்தல் வேண்டும்.

11-450—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**அலவ்வப் பட்டின சபை**

பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் அலவ்வப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

பீ. இராசேந்திரா,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,

கொழும்பு,
1973 ம் ௵ ஒக்டோபர் ௴ 27 ந் ௳.

**துணைவிதிகள்**

1. (1) இத்துணைவிதிகள் 1973 ம் ஆண்டின் அலவ்வ முறைச் சந்தை ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) அலவ்வ முறைச் சந்தை என வழங்கப்படவேண்டியதும் அறிய வேண்டியதுமான முறைச் சந்தை ஒன்று ஒவ்வொரு செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் அல்லது சபையார் நிச்சயிக்கப்படும் வேறேதுமொரு நாளில் சபையால் நடாத்தப்படுதல் வேண்டும்.

2. (1) தலைவரின் அதிகாரத்தால் அல்லது அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டொன்றை உடையவராக அல்லது அத்தகைய உடையவரின் வேலையாளராக அல்லது முகவராக இருந்தாலன்றி அல்லது அத்தகைய அனுமதிச்சீட்டின் நிபந்தனைகளுக்கு இணங்கவன்றி எவரும்

முறைச்சந்தையின் வளவில் உள்ள ஏதேனும் விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தை பயன்படுத்தவோ அதில் நிலைகொள்ளவோ ஆகாது.

(2) முதலாம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிச் சீட்டும் பொருளளவில் இதற்கான முதலாம் அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ள படிவத்தில் இருக்கவேண்டும் என்பதோடு அது வழங்கப்படும் நாளுக்கு மட்டும் வலுவுள்ளதாக இருக்கவும் வேண்டும்.

3. இரண்டாம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டு டைய ஒவ்வொருவரும் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறிப் பிடப்பட்டிருக்கும் வீதங்களிலான ஒரு கட்டணத்தை முறைச்சந்தையின் வளவிலுள்ள விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தைப் பயன்படுத்து வதற்காகக் கொடுத்தல் வேண்டும்.

4. மூன்றாம் துணைவிதியின் கீழ் கொடுபடற்பாலதான கட்டணங்களை சேகரித்தற்கென அலுவலர் ஒருவரை சபையானது வேலையில் அமர்த்தா விட்டால் அது கட்டணங்கள் சேகரித்தற்கான உரிமையை—

(அ) தனிப்பட்ட உடன்படிக்கை மூலம், அல்லது

(ஆ) கேள்விப்பத்திரங்களைக் கோருதல் மூலம், அல்லது

(இ) அந்த உரிமையை ஏலத்தில் விடல் மூலம்

அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவருக்குக் குத்தகைக்கு விடலாம்.

5. (1) இரண்டாம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிச் சீட்டுடையார் எவரும் முறைச் சந்தையில் ஏதேனும் இறைச்சியை விற்றலோ விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலோ ஆகாது, ஆயின் எப்படியிருப்பினும் அத்தகைய பொருள் அல்லது பண்டம் அதற்கென தலைவரால் வழங்கப்படும் சிறப்பனுமதிச்சீட்டின் அதிகாரத்தின் கீழ் விற்கப்படலாம் அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டிவைக்கப்படலாம்.

(2) அத்தகைய அனுமதிச்சீட்டை வழங்குவதற்குப் போதிய நல்ல காரணங்கள் இருக்கின்றனவென்று தலைவர் திருப்திப்பட்டாலொழிய சிறப்பனுமதிச்சீட்டெதுவும் வழங்கப்படலாகாது.

6. இரண்டாம் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டை யாருக்கிடையிலும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் வேலை யாட்களுக்குமிடையிலும், அவர்களுக்கும், பொது மக்களுக்குமிடை யிலும் எழும் சந்தையைப் பயன்படுத்தல் பற்றிய பிணக்குகள் எவையும் முறைச்சந்தையின் வளவினுள் கடமை செய்து கொண்டிருக்கும் தலைவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் தீர்த்து வைக்கப்படலாம்.

7. முறைச்சந்தையின் வளவில் அமைதியானது, அந்நோக்கத் திற்கெனச் சபையால் நியமிக்கப்பட்டவரும் சந்தையின் வளவில் கடமை புரிந்துகொண்டு இருப்பவருமான ஓர் அலுவலரால் நிலைநாட்டப்படும்.

8. பொருட்கள் வாங்குவதற்கென அல்லது அவற்றை விற்றற்கென சந்தைக்கு வரும் ஒவ்வோர் ஆளும் ஏதேனும் பிணக்கைத் தீர்த்து வைக்கும் முகமாக அல்லது அமைதியை நிலைநாட்டுவதற்காக சபையின் அலுவலர் ஒருவரால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் இடப்படும் சட்டப்படியான கட்டளைக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

9. முறைச் சந்தையின் வளவினுள் எவரும்—

(அ) சமையல் வேலை எதுவும் மேற்கொள்ளலாகாது, அல்லது

(ஆ) குழப்பமான முறையில் நடந்துகொள்ளல் ஆகாது, அல்லது சத்தம் செய்தல் ஆகாது, அல்லது குழப்பம் செய்தல் ஆகாது, அல்லது வேறெவரேனும் ஆளுடன் சண்டையிடல் ஆகாது, அல்லது மானபங்கமான, முறைகேடான அல்லது இடக்கம் மொழிகள் பேசுதல் ஆகாது, அல்லது

(இ) சந்தை வளவைவிட்டு வெளியேறும்படி சபையின் அலுவலர் ஒருவரால் அல்லது கிராமசேவகர் ஒருவரால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் செயற்படும் எவரேனும் ஆளால் கட்டளையிடப்பட்டதன் பின்னர் அவர் அவ்வாறு நிற்பதற்குத் திருப்தியான காரணம்காட்ட முடியாத நிலையில் அங்கு நிற்றலோ அங்குமிங்கும் அலைதலோ அல்லது

(ஈ) சூதாட்டத்திலீடுபடுதலோ

கூடாது.

10. (1) தலைவர் அல்லது சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் செயற்படும் பொது சௌக்கியப் பரிசோதகர் எவரும் முறைச் சந்தையின் வளவினுள் விற்பனைக்கென வெளிக்காட்டி வைக்கப்பட்டிருப்பதும் உடனலத்திற்குகந்ததல்லவென்று அவர்க்குத் தோன்றுவதுமான ஏதேனும் பொருளைப் பரிசோதித்தலும் அதைக் கைப்பற்றுதலும் அவர்க்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) முதலாம் பந்தியின் கீழ் கைப்பற்றப்பட்ட பொருள் ஒன்று உடனலத்திற்குகப்பில்லாததென்று அரசாங்க மருத்துவ அலுவலரால் சான்றளிக்கப்பட்டு இருக்கின்றவிடத்து அத்தகைய பொருளானது எவ ரின் உரிமையிலிருந்து அது கைப்பற்றப்பட்டதோ அவருக்கு நட்டஈடு எதுவும் கொடுபடாமலே அழிக்கப்படலாம்.

11. (1) முறைச்சந்தையைக் கண்காணிப்பதற்கென தலைவரால் நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அல்லது ஆள் ஒருவர் அவரது கடமைகளைப் புரியும்போது அவரை எவரும் மறிக்கவோ, தடுக்கவோ தடைசெய்யவோ, அவருக்குத் தொந்தரவு கொடுக்கவோ கூடாது.

(2) கட்டணங்களைச் சேகரிப்பதற்கெனச் சபையால் நியமிக்கப்பட்ட ஒரு ஆள் அல்லது (அத்தகைய கட்டணம் சேகரிப்பதற்கான உரிமை குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றவிடத்து) அத்தகைய குத்தகை எடுப்ப வர் தமது கடமையைப் புரியும்போது அவரை எவரும் மறிக்கவோ, தடுக்கவோ, தடைசெய்யவோ, அவருக்குத் தொந்தரவு கொடுக்கவோ கூடாது.

12. ஆளெவரும்—

(அ) முறைச் சந்தை நிகழ்த்தப்படும் நாளுக்கு முந்திய நாளன்று பிற்பகல் 3 மணிக்கு முன்னர் முறைச் சந்தை வளவில் கொட்டில் போடுதலோ கூடாரம் அடித்தலோ, பாய்கள் அல்லது சாக்குகளை இடுதலோ கூடாது, அல்லது

(ஆ) முறைச் சந்தை நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாள் காலை 9 மணிக்கும் பின்னர் கொட்டில் எதையும், கூடாரம் எதையும், பாய் எதையும், சாக்கெதையும் அல்லது வேறெந்தப் பொருள் எதையும் சந்தைவளவில் இருக்கவிடுதலாகாது.

13. தலைவர் அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் தொழிற்படும் வேறு யாரேனும்சபை அலுவலர் முறைச் சந்தை நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாள் 9 மணிக்குப் பின்னர் சந்தை வளவில் கிடைக்கும் எவை யேனும் கொட்டில்களை, கூடாரங்களை, பாய்களை, சாக்குகளை அல்லது வேறெவையேனும் பொருட்களை அகற்றுதல் அவர்களுக்குச் சட்டமுறை யாதல் வேண்டும்.

14. இந்தத் துணைவிதிகள் எவற்றையேனும் மீறும் ஒவ்வொரு மீறுகையும் 100 ரூபாவிற்கு மிகாத ஒரு குற்றப்பணத்தால் தண்டிக்கப் படற்பாலதாதல் என்பதோடு அத்தகைய மீறுகை தொடர்ந்தும் செய்யப் பட்டு வருகின்றவிடத்து அத்தகைய மீறுகைக்காகத் தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அல்லது அவ்வாறு மீறுகை செய்யப்படுகின்றது என்பதை குறித்துக் கூறும் எழுத்து மூல அறிவித்தலொன்று தலைவரால் அல்லது தலைவர் தீர்க்கமளிக்கப்பட்ட அலுவலரொருவரால் அத்தகைய மீறுவோ ருக்கு விடுக்கப்பட்டதன்பின்னர் அத்தகைய மீறுகை தொடர்ந்து செயற்பட்டுவருகின்ற ஒவ்வொரு நாளுக்கும் 25 ரூபாவுக்கும் மிகாத மேலதிகக் குற்றப்பணம் ஒன்றுலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை I

### அலவ்வப் பட்டின சபை

அலவ்வ முறைச்சந்தை

திகதி..............

இடமிருந்து ரூபா..........சதம்....ஐப் பெற்றுக்கொண்டேன்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | விற்பிடம்/இடம் இல... .. .. | |
| 2. | வெற்றிலை/தேங்காய்/இளநீர்/செவ்விளநீர்/வாழைப்பழம்/ பாக்கு .. .. | |
| 3. | வாகனங்கள் .. .. .. | |
| 4. | இதர பொருட்கள்/சாமான்கள் .. .. | |
| | மொத்தம் | |

..............................

சேகரிப்பாளரின் கையொப்பம்.

அட்டவணை II

1. 50 சதுர அடிக்குக் மேற்பட்ட பரப்பளவுடைய விற்பிடமொன்றுக்கு (விற்பிட இல.......) ..
2. 50 சதுர அடிக்குக் குறைந்த பரப்பளவுடைய விற்பிடமொன்றுக்கு (விற்பிட இல.......) ..
3. 50 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பளவுடைய வெற்றிடத்திற்கு (................) .. ..
4. 50 சதுர அடிக்கு மேற்படாத பரப்பளவுடைய வெற்றிடமொன்றிற்கு............ .. ..
5. ..........வாழைப்பழங்களுக்கு.......... ..
6. ..........இளநீர்களுக்கு.......... ...
7. ..........தேங்காய்களுக்கு............ ..
8. ..........பாரம்பாக்குகளுக்கு.......... ..
9. ..........எண்ணிக்கையான இதரபொருட்களுக்கு ..

மொத்தம்

......ரூபா......சதத்தை மாத்திரம் பெற்றுக்கொண்டேன்.

..................................
சேகரிப்பாளரின் கையொப்பம்.

அட்டவணை II

| | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| (1) 50 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்புடைய ஒரு விற்பிடத்துக்கு .. .. | 1 50 |
| (2) 50 சதுர அடிக்கு மேற்படாத பரப்புடைய ஒரு விற்பிடத்துக்கு .. .. .. | 1 00 |
| (3) 50 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்புடைய வெற்றிடத்துக்கு | 0 75 |
| (4) 50 சதுர அடிக்கு மேற்படாத பரப்புடைய வெற்றிடத்துக்கு | 0 50 |
| (5) வெற்றிலை 1000த்திற்கு .. .. | 0 10 |
| (6) 20 சீப்புகளுக்குக்குறைந்த வாழைப்பழக்குலையொவ்வொன்றுக்கும் .. .. .. | 05 |
| (7) 20 சீப்புக்களுக்கு மேற்பட்ட வாழைப்பழக்குலை யொவ்வொன்றுக்கும் .. .. .. | 0 04 |
| (8) முந்திரிகை வித்து, 1,000 த்திற்கு .. .. | 0 20 |
| (9) தேங்காய், செவ்விளநீர், இளநீர், 100 ற்கு .. | 0 50 |
| (10) பாக்கு 1000ற்கு .. .. .. | 0 50 |
| (11) அன்னுசி 100ற்கு .. .. .. | 1 00 |
| (12) பழங்கள் அல்லது வேறு ஏதேனும் பொருட்கள் 100க்கு அல்லது சாக்கு ஒன்றிற்கு .. .. | 0 25 |

11–449—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

# நானாவித அறிவித்தல்கள்

## திருகோணமலைப் பட்டினம்

உள்ளூராட்சி (நிலையான துணைவிதிகள்) கட்டளைச் சட்டம்

(261 ம் அத்தியாயமான) உள்ளூராட்சி நிலையான உப–விதிகள் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ், அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினுல் ஆக்கப்பட்டதும், திருத்தியமைக்கப்பட்டதுமான 1972, மார்ச்சு 3 இன் 15,001 இலக்கங் கொண்ட பகுதி IV அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள துணைவிதிகள், 1974 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் திருகோணமலை பட்டினத்தில் அமுல் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

எச். டி. டபிள்யு. சிறிவர்த்தன,
விசேட ஆணையாளர்,
திருகோணமலைப் பட்டினம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
திருகோணமலைப் பட்டினம்,
1973 ம் ஆண்டு ஐப்பசி மீ 10 ந் உ.

### துணைவிதி

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறுன, 1953 நவம்பர் 6 ந் தேதிய 10,609 ம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட நியமத் துணை விதிகள், அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள் சம்பந்தமான அதன் VIII ம் பாகத்தில் பின்வருமாறு இத்தால் மேலுந் திருத்தப்படுகின்றன :—

(1) அதன் கண்ணுள்ள 1 ஆவது துணைவிதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய துணைவிதியை இடுவதன் மூலமும் :—

"1. இத்துணைவிதிகளில் அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள்" என்பன, இதனோடுள்ள அட்டவணையில் வகைக்கேற்ப பாகம் I அல்லது பாகம் II அல்லது பாகம் III ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தொழில் எனப் பொருள்படும் ; அத்துடன்

(2) அப்பாகத்தின் முடிவில், பின்வரும் அட்டவணையைப் உட்புகுத்துவதன் மூலமும் :—

அட்டவணை

பாகம் I

அபாயகரமான தொழில்கள்

கபுக்கல், இரவல் அல்லது கருங்கல் தோண்டுதல்.
கபுக்கல், இரவல் அல்லது கருங்கல் சேகரித்துவைத்திருத்தல்.
வாயுப்பானங்கள் உற்பத்தி செய்தல்.
1 குரொசுக்கதிகமான போத்தல்களில் வாயுப்பானங்கள் பண்டசாலையில் வைத்திருத்தல்.
ஐஸ் உற்பத்தி செய்தல்.
கொப்பரு உற்பத்தி செய்தல், பதனிடுதல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்.
எந்திரம் உபயோகித்து அல்லது வேறுவிதமாக தாவர எண்ணெய் பிழிதல்.
50 கலன்களுக்கதிகமாக அளவில் தேங்காயெண்ணெய் பண்டசாலையில் வைத்திருத்தல்.
12 கலன்களுக்கதிகமான அளவில் தேங்காயெண்ணெய் தவிர்ந்த ஏனைய தாவர எண்ணெய்களைச் சேகரித்துவைத்திருத்தல்.
தீக்குச்சு உற்பத்தி செய்தல்.
10 குரொசுக்கதிகமான தீக்குச்சுப் பெட்டிகளைப் பண்டசாலையில் வைத்திருத்தல்.
கபொக் இலவும் பஞ்சு அல்லது பஞ்சு பண்டசாலையில் வைத்திருத்தல்.
மெதஞேல் சேர் மதுசாரம் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்திருத்தல்.
செங்கற்கள் அல்லது ஓடுகள் சேகரித்துவைத்திருத்தல்.
தேயிலைப் பெட்டிகள் அல்லது மரப்பெட்டிகள் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்.
கயிறு அல்லது தும்பு உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்.
கயிறு அல்லது கயிற்றினுல் அல்லது தும்பினுல் செய்த பொருட்கள் பண்டசாலைப்படுத்தல்.
வைக்கோல் அல்லது காய்ந்த புல் பண்டசாலைப்படுத்தல்.
உபயோகித்த துணிகள் பண்டசாலைப்படுத்தல்.
வாடகைக்குவிடும் விளக்குகள் பண்டசாலைப்படுத்தல்.
5 அந்தருக்கதிகமான அளவில் தானியத்தை அல்லது பருப்பைப் பண்டசாலைப்படுத்தல்.
ஆபரணம் உற்பத்தி செய்தல் அல்லது பழுதுபார்த்தல்.
எந்திரம் உபயோகிக்கப்படும் மரமரியும் ஆலையொன்று வைத்திருத்தல்.
கையினுல் இயக்கும் மரமரியும் கிடங்கு அல்லது மரமரியும் ஆலை வைத்திருத்தல்.
வெட்டு மரக்காலை வைத்திருத்தல்.
விறகுக்காலை வைத்திருத்தல்.
கிடங்கு வெட்டி முருகைக்கல் அல்லது சுண்ணக்கல் தோண்டுதல்.
எந்திரம் உபயோகித்து வேலை செய்யும் கொல்லுலையெதுவும் வைத்திருத்தல்.
எந்திரம் உபயோகிக்காது கொல்லுலையொன்று வைத்திருத்தல்.
மொத்த விற்பனைக்காக 15 அந்தருக்கதிகமான அளவில் கோதுமைமா உப்பு அல்லது சீனி பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல்.
வெற்றுப் போத்தல்களையும் வெற்றுச் சாக்குகளையும் பண்டசாலைப்படுத்தல்.
பைசிக்கிள்கள் அல்லது மோட்டார் சைக்கிள்கள் திருத்தும் தொழிற்கூடமொன்று வைத்திருத்தல்.
50 க்கு மேற்பட்ட தொகையில் உபயோகித்த அல்லது புதிய டயர்களை அல்லது ரியுப்களைப் பண்டசாலைப்படுத்திவைத்திருத்தல்.
தேங்காய்ச் சிரட்டைகள் பண்டசாலைப்படுத்திவைத்திருத்தல்.
அந்தரொன்றுக்கதிகமான அளவில் கந்தகத்தை அல்லது கந்தகப் பொடியைச் சேகரித்து வைத்திருத்தல்.
உபயோகிக்கப்பட்ட கடதாசியை அல்லது செய்தித்தாளை சேகரித்து வைத்திருத்தல்.
விசிறு வண்ணம் பூசுவதற்கான தாபனமொன்று வைத்திருத்தல்.
கைத்தறியைத் தவிர்ந்த வேறு வகையால் பருத்தி நூல் நூற்றல் அல்லது செய்தல்.
கைத்தறியைத் தவிர்ந்த வேறுவகையால் புடவை வகைகள் உறபத்தி செய்தல்.
பட்டு, சின்தற்றிக் புடவைவகை நெய்தலும் அமைத்தலும்.
தயாரிக்கப்பட்ட ஆடைவகை உற்பத்தி செய்தல்.
அச்சகமொன்று வைத்தல்.

## பாகம் II

அருவருப்பான தொழில்கள்

காரீயம் பதப்படுத்தல் அல்லது சேகரித்து வைத்திருத்தல்.
பசளை அல்லது உரம் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்.
தோல் பதனிடுஞ்சாலை வைத்திருத்தல்.
தோல் சேகரித்துவைத்திருத்தல்.
5 அந்தருக்கதிகமான அளவில் மாசிக்கருவாடு உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்திருத்தல்.
100 இற்கு மேலான எண்ணிக்கையான பறவைக்கூட்டு கோழிப்பண்ணை அல்லது தொழுவம் வைத்திருத்தல்.
பத்து அல்லது அதற்கதிகமான செம்மறியாடுகளுக்கான அல்லது வெள்ளாடுகளுக்கான அல்லது பன்றிகளுக்கான குடில் அல்லது காலை வைத்திருத்தல்.
ரப்பர் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்.
விலங்கு மருத்துவ மனை வைத்திருத்தல்.
பாக்குகளைப் பதனிடுதல், அல்லது பண்டசாலைபடுத்தி வைத்திருத்தல்
மொத்த விற்பனையின் பொருட்டு பதனழியக்கூடிய உணவுப் பொருகளையும் பதார்த்தங்களையும் பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல்.
3 அந்தருக்கதிகமான அளவில் கருவாடு, உட்பிட்ட மீன் அல்லது பதனிட்ட மீன் பண்டசாலைப்படுத்திவைத்திருத்தல்.
மீன் அல்லது இறைச்சி பதனிடுதல், உலர்த்துதல் அல்லது ஐஸ் போடுதல்.
கரிக்காக மரம் அல்லது தென்னஞ்சிரட்டைகள் சுடுதல் அல்லது கரி சேகரித்து வைத்திருத்தல்.
25 அந்தருக்கதிகமான அளவில் சீமெந்து சேகரித்துவைத்திருத்தல்.
ஒட்டுமியல்புள்ள பொருட்கள் உற்பத்தி செய்தல்.
புகையிலை பதனிடுதல் அல்லது பண்டசாலைப்படுத்தல்.
விலங்குத் தீன் பண்டசாலை வைத்திருத்தல்.
1 தொன்னுக்கதிகமான அளவில் புண்ணுக்கு பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல்.
மிருக அல்லது பண்ணைப் பறவை உணவு உற்பத்தி செய்தல்.
கழிவிறைச்சி அல்லது இரத்தம் அவித்தல்.
சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.
சவ்வரிசி அல்லது மரவள்ளிக்கிழங்கு மா உற்பத்தி செய்தல்.
எலும்புகள் சேர்த்துவைத்திருக்கும் காலை அல்லது சாலை வைத்திருத்தல்.
இறங்குப் பெட்டிகள் உற்பத்தி செய்தல்.
பழைய உலோகம் அல்லது புதிய உலோகம் பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல்.
உலோகத்திற் செய்யப்பட்ட பழைய பொருட்கள் பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல்.
தளபாடங்கள் உற்பத்தி செய்தல் அல்லது பண்டசாலைப்படுத்திவைத் திருத்தல்.
பிரப்பங்கீற்றுப் பொருட்கள் அல்லது பிரம்புப் பொருட்கள் உற்பத்தி செய்தல் அல்லது பண்டசாலைப்படுத்திவைத்திருத்தல்.
தச்சுத் தொழிற்கூடம் வைத்திருத்தல்.
கொங்கிரீற் அல்லது மட்குழாய்கள் பண்டசாலைப்படுத்திவைத்திருத்தல்.
பாணி அல்லது பழரசப் பானங்கள் செய்தல்.
மிட்டாய் வகைகள் உற்பத்தி செய்தல்.
தேங்காய் மட்டைகளை அல்லது வெட்டு மரங்கள் ஊறப் போடும் ஆலை வைத்திருத்தல்.
கொழுப்பு உற்பத்தி செய்தல் அல்லது எடுத்தல்.
பல் துலக்கும் தூரிகைகள் உற்பத்தி செய்தல்.
கள் சேர்க்கும் வாடி வைத்திருத்தல்.
வினாகிரி உற்பத்தி செய்தல் அல்லது பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல்.
அமிலங்கள் பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல் அல்லது உற்பத்தி செய்தல்.
சுண்ணாம்புக் கற்கள் அல்லது சுண்ணாம்பு பண்டசாலைப்படுத்தி வைத் திருத்தல்.
பாணி உற்பத்தி செய்தல் அல்லது பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல்.
5 அந்தருக்கதிகமான அளவில் வர்ணப் பூச்சு அல்லது வார்னிஷ் அல்லது திஸ்ரெம்பர் பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல்.
பலகைகள் பாடம் பண்ணல் அல்லது பதப்படுத்துதல்.
கோடா உற்பத்தி செய்தல்.
தும்பு சாயம் போடுதல்.
கொக்கோ அல்லது பப்பெயின் பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல.
தோற் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கா ஒரு தொழிற்சாலை வைத்திருத்தல்.
பழங்கள், மீன் அல்லது வேறு உணவுப் பொருட்களைத் தகரங்களில் அடைத்தல்.
கோப்பி தானியப் பொருட்கள், பருப்பு வகைகள், கறிச்சரக்குகள் அல்லது கோதுமை அரைத்தல்.
எந்திரத்தினால் தானியம் அல்லது பருப்புகள் அரைத்தல்.
அப்பச் சோடா உற்பத்தி செய்தல்.
மார்சரீன் உற்பத்தி செய்தல்.
வாயு மண்டில்கள் உற்பத்தி செய்தல்.
மக்கு உற்பத்தி செய்தல்.
மெழுகுதிரிகள் உற்பத்தி செய்தல்.
கற்பூரம் உற்பத்தி செய்தல்.
எழுதுதல், அச்சிடுதல், அல்லது மெழுகுதாள் அச்சிடுதல் மை உற்பத்தி செய்தல்.
சலவை நீலம் உற்பத்தி செய்தல்.
நிறமூட்டும் பவுடர் உற்பத்தி செய்தல்.
அச்சுமெழுகு உற்பத்தி செய்தல்.
முகப்புவுடர் உற்பத்தி செய்தல்.
பாடசாலைச் சுண்ணக் கட்டி உற்பத்தி செய்தல்.
டயர் மீள நிர்மாணிக்கும் அல்லது புதுப்பிக்கும் தாபனம் வைத்திருத்தல்.
டயர்களையும் ரியூப்களையும் வல்கனைஸ் செய்யும் தாபனம் வைத்திருத்தல்.
சீமேந்துப் பொருட்கள் அல்லது கல் நார் சீமேந்துப் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
அரத்தாள் உற்பத்தி செய்தல்.
தேய்க்கும் அல்லது மினுக்கும் கற்கள் உற்பத்தி செய்தல்.
பாடசாலைக் கற்பலகை (சிலேட்கள்) உற்பத்தி செய்தல்.
சுகாதாரத் துவாய்கள் உற்பத்தி செய்தல்.
பிளாஸ்ரிக் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
கடற்பஞ்சு பண்டசாலைப்படுத்தி வைத்திருக்கும் அல்லது பதனிடுதல்.
குளிரூட்டப்பட்ட இறைச்சி அல்லது மீன் பண்டசாலைப்படுத்தி வைத் திருத்தல்.
தேங்காய்த் துருவல் உற்பத்தி செய்தல்.
ஒளிப்படக் கலைக்கூடம் வைத்திருத்தல்.
இரத்தினக் கல் பட்டம் வெட்டுதலும் மினுக்குதலும்.
நீர் கலந்து சுண்ணாம்பு வெளிறச் செய்யும் தூள் மற்றும் தொடர்பான பொருட்கள் உற்பத்தி செய்தல்.
ஏலக்காய் பதப்படுத்துதல் அல்லது உலர்த்துதல்.

## பாகம் III

அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள்

அப்பிரகம் (மைக்கா) பதனிடுதல்.
இரசாயனப் பொருட்கள் பாவித்து கறுவா, ஏலக்காய் அல்லது தும்பு பதனிடுதல்.
உலர் சலவை செய்யும் அல்லது சாயமூட்டும் தாபனம் வைத்திருத்தல்.
ஆடைவகை அச்சிடும் அல்லது சாயமூட்டும் தாபனமொன்று வைத் திருத்தல்.
மின் முலாம் பூசும் தாபனம் வைத்திருத்தல்.
எண்ணெய் அல்லது மிருகக் கொழுப்புக் காய்ச்சுதல்.
சுண்ணாம்பு சுடுதல், பதனிடுதல், பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல் அல்லது ஆக்குதல்.
மாப்பண்டங்கள் மெருகூட்டல்.
வாணங்கள் அல்லது வெடிகள் விற்பனை செய்யும் இடமொன்று வைத்திருத்தல்
சுருத்துருப்புகள் பதனிடுதலும் பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தலும்.
3 அந்தருக்கதிகமான அளவில் தேயிலை பண்டசாலைப்படுத்தி வைத் திருத்தல்.
பற்றறிகளுக்கு மின்னூட்டுதல் அல்லது பழுதுபார்த்தல்.
காய்ச்சியிணைப்பதற்கான தாபனமொன்று வைத்திருத்தல்.
மோட்டார் வாகனங்களைத் திருத்தும் அல்லது அவற்றுக்கு நன்னிலைச் சேவையாற்றும் வேலைத்தலம் வைத்திருத்தல்.
வள்ளங்கள் செய்யும் தாபனம் வைத்திருத்தல்.
எந்திரத்தினால் கருங்கல் நொருக்குதல்.
வார்ப்புச் சாலையொன்று வைத்திருத்தல்.
தகர வேலைக்களமொன்று வைத்திருத்தல்.
கல் நினைவுச் சின்னங்கள் உற்பத்தி செய்தல்.
பெற்ரோல், டீசல், எண்ணெய், வேறு பிற எண்ணெய் பண்டசாலைப் படுத்தி வைத்திருக்கும் இடமொன்று வைத்திருத்தல்.
பெற்ரோல் நிலையமொன்று வைத்திருத்தல்.
மோட்டார் வாகன உடற்கோப்புகள் உற்பத்தி செய்வதற்கான தாபன மொன்று வைத்திருத்தல்.
மினுக்கிகளை அல்லது மெழுகுகளை உற்பத்தி செய்தல்.
அக்ரேறு இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்தலும் பண்டசாலைப் படுத்தி வைத்திருத்தலும்.
தொற்றுநீக்கி உற்பத்தி செய்தல்.
நுளம்பு நாசினிகள் உற்பத்தி செய்தல்.
மரக்காப்பு இரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்தல்.
இறப்பர் கூழை அல்லது இறப்பர்ச் சீமேந்தை உற்பத்தி செய்தல்.
நீலகிலை அல்லது வேறு பிற்றுமின் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
முகம்பார்க்கும் கண்ணாடி உற்பத்தி செய்தல்.
தாள் இரும்புக்கு நாகம் பூசுதல்.
பற்றுக ஈயம் உற்பத்தி செய்தல்.
அலுமினியம் பொருட்கள் உற்பத்தி செய்தல்.
முட்கம்பி உற்பத்தி செய்தல்.
கம்பி ஆணிகள் உற்பத்தி செய்தல்.

கார்பன் தாள்கள் அல்லது தட்டச்சுப்பொறி நாடாக்கள் உற்பத்தி செய்தல்.

தகரக் கொள்கலன்கள் உருக்குப் பீப்பாக்கள் அல்லது சேகரிப்புத் தாங்கிகள் உற்பத்தி செய்தல்.

நாகம் பூசிய வாளிகள் உற்பத்தி செய்தல்.

காற்றைச் சீராக்கும் பொறிகள், குளிரூட்டும் பெட்டிகள் அல்லது உறைய வைக்கும் பெட்டிகள் உற்பத்தி செய்தல், நன்னிலைச் சேவை யாற்றல் அல்லது பழுதுபார்த்தல்.

பிரேக் அல்லது கிளச் உள்வரிகள் உற்பத்தி செய்தல்.

பொறித் தொகுதிகள் உற்பத்தி செய்தல்.

மின்சாரப் பொருட்கள் உற்பத்தி செய்தல்.

இறப்பர் கலந்து தும்பு உற்பத்தி செய்தல்.

ஸ்ரோறேஜ் மின்கலம் உற்பத்தி செய்தல்.

டிறைசெல் மின்கலம் உற்பத்தி செய்தல்.

ஈய மின்கலங்களைச் சீராக்கும் இடம் வைத்திருத்தல்.

ஆபாரணங்கள் செய்பவர்கள் கழித்துவிடும் பொருட்களிலிருந்து விலையுயர்ந்த உலோகத்தை உருக்கும் இடம் வைத்திருத்தல்.

டிருக்டர் வாகனங்கள் கோத்தல்.

றேடியேட்டர்கள் உற்பத்தி செய்தல்.

மின்சாரக் கடை அல்லது வானொலிப் பெட்டிகள் திருத்தும் கடை அல்லது வானொலிப் பெட்டித் தொழிற்கூடம் வைத்திருத்தல்.

11-448—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85

---

**உடப்பு கிராம சபை**

**1952** ஆம் ஆண்டின் **6** ஆம் இலக்க உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நிலையான உப-விதிகள்) பற்றிய சட்டம்

உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நிலையான உப-விதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் **261**) **3** ஆம் பிரிவின் கீழ் சிலாபம் மாவட்டத்து உடப்புக் கிராமப் பிரதேசத்தின் கிராமசபையினால் நிறைவேற்றப்பட்ட கீழ்க் காணும் தீர்மானம் அப்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

**தீர்மானம்**

உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நிலையான உப-விதிகள்) சட்டத்தின் **3** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின் கீழ் சிலாபம் மாவட்டத்து உடப்புக் கிராமப் பிரதேசத்தின் கிராமசபையால் இத்தீர்மானம் ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானியில் பிரசுரமாகும் தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படற்குரியதென சம்மதமளிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி அமைச்சரவர்களால் ஆக்கப்பட்டு **1972** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் **3** ஆம் திகதியின் **32** ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, **1973** ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் **5** ஆம் திகதியில் தேசிய அரசுப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டதென **1973** ஆம் ஆண்டு ஜூன் மாதம் **29** ஆம் திகதியின் **66** ஆம் இலக்க ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானியில் உள்ளூராட்சி மன்றங்கள் (நியமத் துணைவிதிகள்) சட்டம் பிரிவு **2 (3)** இன் கீழாக அறிவிக்கப்பட்ட நியமத் துணைவிதியின் **42** ஆவது பாகத்தை,

இத்தீர்மானம் ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளுவதென, சிலாபம் மாவட்டத்து உடப்புக் கிராமசபையால் **1952** ஆம் ஆண்டின் **6** ஆம் இலக்க உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நிலையான உப-விதிகள்) சட்டத்தின் **3** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

பூ. கந்தசாமி,
தலைவர்,
உடப்பு கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
உடப்பு,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 15 ந் உ.

**11-254—09.11.73 ந் திகதிய வர்த்தமானி இல. 85**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க, விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்ட என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | | **வெளியீட்டு நாள்** | | | **அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | **02.11.73** | வெள்ளி | .. | **26.10.73** | வெள்ளி | .. | **ந.ப. 12.00** |
| | | **09.11.73** | வெள்ளி | .. | **02.11.73** | வெள்ளி | .. | **ந.ப. 12.00** |
| | | **16.11.73** | வெள்ளி | .. | **09.11.73** | வெள்ளி | .. | **ந.ப. 12.00** |
| | | **23.11.73** | வெள்ளி | .. | **16.11.73** | வெள்ளி | .. | **ந.ப. 12.00** |
| | | **30.11.73** | வெள்ளி | .. | **23.11.73** | வெள்ளி | .. | **ந.ப. 12.00** |
| **திசெம்பர்** | .. | **07.12.73** | வெள்ளி | .. | **30.11.73** | வெள்ளி | .. | **ந.ப. 12.00** |
| | | **14.12.73** | வெள்ளி | .. | **07.12.73** | வெள்ளி | .. | **ந.ப. 12.00** |
| | | **21.12.73** | வெள்ளி | .. | **14.12.73** | வெள்ளி | .. | **ந.ப. 12.00** |
| | | **28.12.73** | வெள்ளி | .. | **21.12.73** | வெள்ளி | .. | **ந.ப. 12.00** |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1972 ம் ஆடு நவெம்பர் மீ 09 ந உ.**